(6 pages) **Reg. No. : .......................................**

**Code No. : 5343** **Sub. Code : PTLM 23**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2021.

Second Semester

தமிழ் — Core

பக்தி இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. திருமழப்பாடி பதிகம் பாடியவர் யார்?

(அ) ஞானசம்பந்தர் (ஆ) நாவுக்கரசர்

(இ) சுந்தரர் (ஈ) மாணிக்கவாசகர்

2. இராவணனின் வனப்பும் வலிமையும் அழியுமாறு செய்தவர் யார்?

(அ) பிரம்மன் (ஆ) முருகன்

(இ) சிவன் (ஈ) இந்திரன்

3. மன்மதனுடைய கொடிய வில்லுக்கு ஆட்பட்டு பாரினரோடு யான் கூடுவதில்லை எனக் கூறியவர் யார்?

(அ) திருப்பாணாழ்வார் (ஆ) பேயாழ்வார்

(இ) குலசேகரஆழ்வார் (ஈ) பெரியாழ்வார்

4. கண்ணன் யாரைப் போர்க்கோலம் பூண்டு தன்னிடம் அனுப்பியதாக ஆண்டாள் குறிப்பிடுகிறாள்?

(அ) காந்தள் மலர் (ஆ) தாமரை

(இ) ரோஜா (ஈ) மல்லிகை

5. இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

(அ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

(ஆ) வீரமாமுனிவர்

(இ) கால்டுவெல்

(ஈ) சீகன் பால்க் ஐயர்

6. இரட்சணிய யாத்திரிக நூலில் திருச்சபை எதற்கு உவமையாகக் கூறப்படுகிறது?

(அ) சூரியன் (ஆ) கடல்

(இ) ஆகாயம் (ஈ) சந்திரன்

7. அருணகிரிநாதர் யாருடைய அருளால் பேசும் திறன் பெற்றார்?

(அ) வள்ளி (ஆ) சிவன்

(இ) முருகன் (ஈ) பார்வதி

8. மனிதர்களைக் கண்டு ஐந்து உறுப்புக்களையும் ஒடுக்கிக் கொள்ளும் உயிரினம் எது?

(அ) முயல் (ஆ) ஆமை

(இ) மீன் (ஈ) ஈசல்

9. முப்பழம் நுகரும் மூஷிக வாகனன் யார்?

(அ) முருகன் (ஆ) எமன்

(இ) சிவன் (ஈ) விநாயகர்

10. "அன்னை இல்லாச் சேய் போல் அலக்கண் உற்றேன்" — என்று பாடியவர் யார்?

(அ) பாரதியார் (ஆ) ஔவையார்

(இ) வள்ளலார் (ஈ) தாயுமானவர்

பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) சிவனின் பெருமைகளாகச் சுந்தரர் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) மகளிர் கூற்றாக மாணிக்கவாசகர் திருப்பூவல்லியில் பாடிய பாடற்கருத்துக்களை நிறுவுக.

12. (அ) பெரியாழ்வாரின் வேலிக்கோல் பூச்சூட்டல் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஸ்ரீரங்கநாதனைப் பாராட்டிய விதத்தினை திருப்பாணாழ்வார் பாடல் வழி நிறுவுக.

13. (அ) திருச்சபைக் குறித்தச் செய்திகளை இரட்சணிய யாத்திரிகம் வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) செய்துத்தம்பிப் பாவலர் பற்றி குறிப்பு வரைக.

14. (அ) பத்திரகிரியார் பாடல்களில் காணலாகும் நிலையாமைக் கருத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கந்தரனுபூதி நூல் குறித்துக் கூறுக.

15. (அ) தாயுமானவர் இறைவனிடம் மனமுருகி வேண்டியனவற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) விநாயகரின் அழகினை ஔவையார் வழி நிறுவுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) திருஞானசம்பந்தர் திரு வெண்ணியூரில் வீற்றிருக்கும் இறைவனை எவ்வாறு போற்றுகிறார்?

(அல்லது)

(ஆ) திருநாவுக்கரசரின் தனித்திரு குறுந்தொகை மூலம் அறியலாகும் பாடல் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. (அ) பொய்யாகிய வாழ்வைக் குறித்து ஸ்ரீரங்கநாதரிடம் குலசேகராழ்வார் கூறுபனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருப்பாணாழ்வார் அமலனாதிபிரானில் கூறிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. (அ) இரட்சணிய யாத்திரிகம் சமயநூலே என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) ஆதிபருவம் வாயிலாக அறியலாகும் இரட்சணிய யாத்திரிகக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

19. (அ) பத்திரகிரியாரின் பக்திச் சிறப்பைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) முருகப்பெருமானின் பெருமைகளாக அருணகிரிநாதர் கூறுபனவற்றைத் தொகுத்துரைக்க.

20. (அ) வள்ளலாரின் வேட்கை விண்ணப்பக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) விநாயகர் அகவலின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

---